www.tamilarangam.net

# தேனீ

தை

THENEE JANUARY 1990



## ஒரு"மனித"னின் பிரகடனம்

அங்கங்களுக்கிடையே
அடிதடிச் சண்டை நிகழ
எங்களுக்கு நாங்களே
எதிரிகளாக்கப் பட்டோமோ?

நம் தாய்மண்
தீப் பிடித்துச் சாம்பலாச்சு.

ஒற்றுமைச் சங்கிலிகள்
அறுக்கப்பட்டதால்
கற்பிழந்தவர்களாய்
கதறுகிறோம்.

நாங்கள்-
சுயநல உதடுகள்
ஊதி மிதிக்கும்
சிகரட்டுகளா?
அன்பே-
என் உள்ளத்தில் இருக்கும்
உலகம் இதுவல்ல.

-எஸ்.எச்.எம்.ரபீக்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொங்கல்

தைமாதத்து
நாட்கள்
பொங்கலுக்காய்
மீண்டும்
கர்ப்பமுற்றன ....

வெளிச்சம்
குடித்த
நெல்லும் கரும்பும்
வயதுக்கு வந்தன
நிலம் குனிந்து
வெட்கப்பட்டன ...

பானைகள் பொங்கிச்
சிரிப்பதை
சூரியன்
படம் எடுக்க வருகிறான்....

என் இதயத்தை
கடன் வாங்கிய அவளோ
வழமை போலவே
வேலிக்குள்ளால்
எங்கவீட்டுப்படையல் என்று
சொல்லப்போகும்
இந்த மாதத்து
நாட்கள்...

காத்திருந்தேன்
சென்ற ஆண்டைப்போலவே
ஆனால்
நாட்டுமுற்றத்தில்
இன்னும் மனித உடல்கள்
மாக்கோலங்களாய்..
அவர்களோ
தோரணங்களாய்...

சூரியன் இல்லா
பொங்கலை
இலங்கையின்
தேசப்படத்தில்
செய்துகொண்டிருக்கிறார்கள்

இப்படி
எத்தனை ஆண்டுகள்
இறந்தன
ஆனாலும்
காத்திருக்கிறேன்

எங்கவீட்டுப்
படையல் என்று
அவள்
சொல்லப் போகும்
அடுத்தவருட
தைமாதத்து
நாட்களுக்காய்....!

காங்கேசன் கோவிந்குமார்

www.tamilarangam.net

# ரீங்காரம்

அன்பானவர்களுக்குத் தேனீயின் அன்பான வணக்கங்கள்.

இது 1990
எமது தாய் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கும் யுத்தமேகங்கள் இன்னமும் அகலவில்லை.
ஏழு வருடங்களுக்கு முன் உச்சக்கட்டத்தையடைந்து இராணுவ காட்டுமிராண்டித்தனங்களாக கட்டவிழ்க்கப்பட்டு எண்ணற்ற உயிரிழப்புகளிற்கும் பேரழிவுகளுக்கும் காரணமான சிறிலங்காவரசின் இனவொடுக்குமுறை முன்னைவிடவும் பயங்கரமாக மக்களை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது.பத்து வருடங்களாக அமுலில் இருக்கும் "பயங்கரவாத தடைச்சட்டம்" இன்னமும் தளர்த்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளது.கசப்பான கடந்த காலங்களைப் போலவே இராணுவபயங்கரவாதக் கொடூரங்கள் மேலும் வலுப்பெறுவதற்கான அறிகுறிகள் அதிகமாகத்தெரிகின்றன.
அமைதி என்பதற்கும் மக்களுக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளிகளை கொலைகளும் அழிவுகளும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.
சமாதானம், ஜனநாயகம்,ஐக்கியம் என்பவற்றை வெறும் வார்த்தையளவில் கானல் நீராக வைத்திருக்கவே பலரும் விரும்புகிறார்கள்.
ஆனால்
அகதிகளாக இடம் பெயர்வதும், உயிர்களையும்,உறவுகளையும் இழந்து அகால மரணங்களால் அழிந்து போவதுமே எமது மக்களின் தொடரும் வரலாறாகவுள்ளது.உருவாகும் எத்தகைய திருப்பங்களும் தீர்வுகளைக் காணமுடியாமல் உடைந்து விழுவதால் சரித்திரம் அழுது கொண்டிருக்கிறது.
மனிதவுயிர்கள் கொல்லப் படுவதும் நாடு வன்முறைத்தாண்டவங்களின் சுடுகாடாவதும் தினசரி நிகழ்ச்சிகளாகிவிட்ட பின்பும் மக்களின் தேவையிலிருந்து அந்நியப்படுவது, எதிரியின் வரவிற்கு செங்கம்பளம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரிப்பதற்கு ஒப்பாகும்.

இதே மண்ணில் பலவருடங்களாக நடைபெறும் அரச இராணுவவொடுக்கு முறைகளும் அநியாய உயிரிழப்புகளும் அடிப்படைத்தன்மைகளில் மாற்றமின்றி அதேவிதத்தில் இன்னமும் தொடர்கின்றது.எமது தேசத்தையும்,எமது வாழ்வையும் கடித்துக் குதறிய கூலிப்படைகள் எமது மண்ணில் இன்றும் வீதிவலம் வருகின்றன.

ஆனால்

அதே மண்ணில் அதே கொடுமைகளுக்கெதிராக, அதே மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்காக

கிளர்ந்தெழுந்த போராட்டத்தைத் தான் இன்று காணவில்லை.

தான் நசுக்கும் மக்களின் அழுகுரல்களைப் பற்றியும், சிந்தும் இரத்தத்தைப் பற்றியும் ஆள்பவர்கள் ஒருபோதும் கவலைப் படுவதில்லை. தனது நலன்களைக் கருத்திற்கொண்டு இன அழிப்பில் குளிர்காய்வதற்காக சிறிலங்காவரசு எமது பிரதேசங்கள் எங்கும் நெருப்பு மூட்டுகிறது.

இந்த நேரத்திலும்

எமது விடுதலைக்கான பாதை எது?

எமது மக்கள் மரணப் பீதியின்றி வாழ்வதற்கான உத்தரவாதமுள்ள தீர்வு என்ன?

அந்தப் பாதையை அடைவதற்கு முதலில் எந்த வழியால் போவது?

போன்ற கேள்விகளுக்கான பதில்களைத் தேடுவதே பொருத்தமானதாகும்.எந்த விதமான நிலமைகள் நிலவும்போதும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதும் பலன்களை அனுபவிப்பதும் அங்கு வாழும் சாதாரணமக்கள்தான். அவர்கள்,அமைதியையே விரும்புகிறார்கள்.ஆள்பவர்களின் திருப்திக்காக மக்கள் நெருப்பில் விழும் வரலாறு மாற்றியெழுதப்படவேண்டும்.

சமாதானத்திற்காக ஏங்கும் மக்களுக்காகவும், வரலாற்றுக்காகவும் ஐக்கியம் என்பதை உண்மையாக்கி பொறுப்புணர்ச்சியுடனும் ஜனநாயகப்பண்புகளுடனும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களே மக்களுடைய நம்பிக்கைகுத் துரோகமற்ற தீர்வுகளை உருவாக்கும்.

தேனீக்கள்.

www.tamilarangam.net

சிறுகதை

# ஒரு பிரஜை அகதியாகிறான்!

-- ஜீவன்



எட்டு மணிக்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. தலைமன்னாரில் ஒரு சமுகசேவை ஸ்தாபனததின் அறை ஒன்றில் முகமறியாத ஒருவனின் வரவுக்காகக் காத்திருந்த நான், நிகழ்வுகள் இல்லாத அந்த நாளின் நினைவுகளை மட்டும் டயறியில் குறித்துக் கொண்டேன்.

"நாளை எட்டு மணிக்குப் புறப்பட ஆயுத்தமாக இருங்கள்" என்ற தகவலைத் தந்து விட்டு' நேற்றிரவு ஒரு இளைஞன், இருளில் தூரத்திலிருந்த குடிசைகளுக்குள் சென்று மறைந்து விட்டான். முகமறியாத இந்த இளைஞர்களிடம் எவ்வளவு நம்பிக்கை வைக்கிறோம்...ஏதோவொரு விரக்தி, ஏதோவொரு வைராக்கியம்..ஒரு ஒன்றிணைந்த உணர்வுகள்....

கடந்த நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் அடைக்கலம் தந்த அந்த அறையை ஒரு தரம் சுற்றிப் பார்த்துக் கொண்டேன்.பாயைச் சுற்றி சுவரோடு சாய்த்து வைத்தேன். தலையணையாகப் பாவித்த கைப்பை - சொந்த நாட்டிலிருந்து எடுத்துப் போகும் என் "பொக்கிசங்கள்" அதனுள் இருந்தன.பழைய உடுப்புக்கள் இரண்டு, சில புத்தகங்கள், ஒரு டயறி....

சாதரண மனிதர்களாக சதாரண சூழ்நிலமைகளில் வாழ்ந்தவர்களை வரலாற்றுச் சூழ்நிலலைகள் சற்றும் எதிர்பாராத நிலமைகளுக்குத் தள்ளி விடுகின்றன. அது எனது அனுபவமும் கூட.
அரசியல் - அது எனக்குத் தொடர்பில்லாத விஷயம் என்றுதான் நான் எண்ணிக் கொண்டிருந்தேன் பொலிசார் என் வீட்டு வாசலுக்கு வரும் வரை...
அவர்கள் ஏன் வந்தார்கள் என்பது எனக்குப்புரிய நாட்கள் சென்றது. அவர்களுக்குப் புரிந்திருக்க முடியுமோ? இருக்காது.
வேட்டைக்குப் போகும் நாய்க்கு அதன் எஜமானின் நோக்கம் புரிவதில்லை. தனக்குக் கிடைக்கும் எலும்புத் துண்டுதான் அதன் இலட்சியம். கடித்துக் குதறப் படுவது முயல்கள்தானே.
ஒவ்வ நேரங்களில் சிலர் நாட்டிற்கு நல்லது கதைக்கிறுர்கள் என்று கேட்கப் போனேன்....புதிய சட்டங்களாம், சிறைபிடித்தலாம், சித்திரவதைகளாம்.. இவற்றையெல்லாம் நிறுத்த வேண்டுமென்று பேசினார்கள். அவர்கள் நல்லவர்கள்.
உண்ணா விரதமென்றார்கள் - கலந்து கொண்டேன். ஊர்வலம் சென்றார்கள் - போய் வந்தேன். நாட்டில் எமக்காக பலர் எத்தனையோ கஷ்டங்கள் படுகிறார்கள். அவர்களுக்காக நாம் இது கூடச் செய்க்கூடாதா?...துண்டுப்பிரசுரங்கள் தந்தார்கள். நண்பர்களுக்குக் கொடுத்தேன்..
"என்னடா நீயும் அரசியலில் குதித்து விட்டாயா?" என்று கேலியாகக் கேட்டார்கள்.

"அது என்ன கிடங்கா குதிப்பதற்கு" என்று பகுடியாகப் பதில் சொன்னேன். பின்புதான் தெரிந்தது அது மீளமுடியாத கிடங்கென்று.

பொலிஸ்காரர் வீட்டுவாசலில் வந்து விசாரித்த பொழுது,.... என் அக்காள் நான் வீட்டில் இல்லை என்று பதிலளித்த பொழுது ,... நான் "தேடப்படுபவன்" என்பதை உணர்ந்தேன்...ஆனால் என்ன குற்றம் செய்தேன் என்பதுதான் புரியவில்லை. வெளியில் தலைகாட்டி விசாரித்த பொழுது, நான் துண்டுப் பிரசுரம் கொடுத்த சிலர் பொலிசில் அகப்பட்டுச் சித்திரவதைப் படுவதாக அறிந்தேன். அது பற்றி மேலும் விசாரிக்க நேரம் கிடைக்கவில்லை. நிலமைகள் மோசமடைந்தன.

நாடே தீப்பற்றி எரிந்த 83யூலை நாட்கள் அவை.

"இங்கையிருந்து வீணாகச் சாகாமல் எங்காவது போ" என்றாள் அக்காள்.

"வெளிநாடு" - நண்பன் ஒருவன் வெளிநாடு போன ஞாபகம் வந்தது. அப்படியெல்லாம் போக என்னால் எப்படி முடியும்?

அவன் செலவில் வழியனுப்ப கட்டுநாயக்க வரை என்னைக் கூட்டிச் சென்றான். அவனுடைய சொந்தக்காரர் யாரோ "இன்ஜினியரிங்" படிக்க அவனை இலண்டனுக்குக் கூப்பிட்டிருந்தார்கள். புறப்படும் போதே "இன்ஜினியர்" என்ற அடை மொழியுடன் அவன் குடும்பத்தாரும் மற்றவர்களும் அவனைக் கூப்பிட்டார்கள். திரும்பிவரும் போது அவன் சீதன விலை என்னவாக இருக்கும் என்றும் சிலர் மதிப்பீடு செய்தனர்!

விமான நிலயத்தின் ஆரவாரங்கள், ஒலிபெரிக்கிகள், போவோரும் வருவோருமாக இருக்கும் வெளிநாட்டவர்கள், நவநாகரிக மனிதர்கள்...இவற்றுடன் என்னுடைய நண்பன் கோட்,சூட்,ரையுடன் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்படத் தயாராக இருந்தான்.

மேலும் தேடல்கள்! நெருக்குவாரங்கள்!!

நானும் வெளிநாடு போக அவசர அவசரமாக என்னுடைய பிரயாண ஏற்பாடுகளைச் செய்தேன்.

* * *

அறைக்கதவில் எதிர்பார்த்த" தட்டல்" கேட்டது.அருகில் இருந்த கைப்பையுடன் புறப்பட ஆயுத்தமானேன்.

"எனக்குப் பின்னால் வாருங்கோ.." என்றபடி ஒரு இளைஞனின் உருவம் முன் சென்றது. இருட்டில் பின் தொடர்ந்தேன்.

இருட்டுப்பகுதிகளில் மெதுவாக நடந்தான், வெளிச்சமான பகுதிகளில் ஓடினான் - நானும் ஓடினேன். தூரத்தில் "சேர்ச்லைட்" சுழன்று கொண்டிருந்தது. அதன் ஒளி வெள்ளத்தை இருள் தொடர்ந்தது. அந்த இருளில் வேகமாக நடந்தோம். குடிசைகள்.. ஒழுங்கைகள்...மணல்பரப்பில் நடக்கத் தொடங்கினோம். சிறிது தூரத்தில் சிலர் நின்றுகொண்டிருந்தனர்.

முன் அறிமுகமில்லாத முகம்கள்..அடையாளம் காணமுடியாத இருட்டு...எங்களுக்கு முன் கடல் கருமையாக இருண்டிருந்தது. ஆழமான கடல்..அனுபவமில்லாதவர்களுக்கு ஏற்படுத்தும் பீதியுணர்வா?..எல்லாவற்றையும் இழந்து கடலலில் மிதக்கும் மரக்கட்டை போல நாமும்..அசுரவேகத்தில் ஏற்படும் நிகழ்வுகளினால் சில உணர்வுகளை உணரமுடியாது மனம் மரத்துப் போய்விடுகிறது போலும்.

என்னைப் போலவே எல்லோரும் சேட்,சரம்...கைப்பையுடன் பிரயாணத்திற்குத் தயாராக இருந்தனர்.

....புறப்படும் நேரம் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்படவில்லை....சுங்கஅதிகாரிகள் பைகளைச்

www.tamilarangam.net

சோதிக்கவில்லை....கடவுச்சீட்டு, அதைப்பற்றி யாரும் அலட்டிக் கொள்ளாத துறைமுகம் அது.
தண்ணீருக்குள் இறங்கிப் படகை நோக்கி நடந்தோம்.நீருக்கடியில் கற்கள் வெறும் கால்களை நெருடின. சாரத்தை முளங்கால் வரை தூக்கிக்கொண்டேன். ஏழு பிரயாணிகள் படகில் ஏறிக் கொண்டனர்.கரையில் இருந்தவர்கள் படகோட்டிகளுடன் ஏதோ பேசிக் கொண்டனர். அவர்கள் பேசியது தமிழ்தான், ஆனால் அது எனக்குப் புரியவில்லை. மற்றவர்களுக்கும் புரியவில்லை போலவே தோன்றியது.
இரண்டு இளைஞர்கள் தண்ணீரில் நின்று படகைத் தள்ளினார்கள்.

படகு மிதந்தது. படகில் நின்று தடிகளை தண்ணீருக்குள் வைத்து ஊன்றி...ஊன்றி...இருளின் நிசப்தத்தில் தடிகள் தண்ணீரில் ஏற்படுததும்..கழுக்..கழுக்..என்ற சத்தம் மட்டும்...படகு அமைதியாக கரையை விட்டு அகன்று கொண்டிருந்தது.
தலைமன்னாரின் ஒளி விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.
குடிசைகளும், கட்டங்களும் மங்கலான தோற்றங்களாக... கண்கள் தரையை பார்த்தபடியிருந்தன..ஒரு பாசம்..அதே சமயம் ஒரு பயம்.... அமைதியாக திருடர்கள் போல சொந்த நாட்டை விட்டு அதன் பிரஜைகள்... படகு கடலின் ஆட்டத்துடன் ஆடத் தொடங்கியது."பட்...பட்...பட்" இனஜின்கள் இயங்க ஆரம்பித்தன. மெதுவாக ஊர்ந்த படகு நீரின் மேல் ஓட ஆரம்பித்தது.
அருகிலிருந்தவர்களின் பயப்பெருமூச்சுக்கள் பலமாகக் கேட்டன. ஒருவர் தன் தலையையும் தோள்களையும் தொட்டுக் குருசு அடையாளம் போட்டுக் கொண்டிருந்தார். யாரோ ஏதோ முணுமுணுப்பது "இசு,பிசு" என்று கேட்டது. எந்த்தெய்வத்தை என்ன பாஷையில் வேண்டிக் கொண்டார் என்று விளங்கவில்லை.

படகின் வேகம் அதிகமாகியது. "இரண்டு மோட்டர் வேலை செய்யுது" என விசயமறிந்த பிரயாணி ஒருவர் விளக்கினார்."..ம்.."என்று பயத்துடன் ஆமோதித்தார் மற்றவர். நீரைக் கிழித்துக் கொண்டு முன்னேறியது. வெண் நுரையாக கடல் நீர் உள்ளே சிந்தியது. சேட்,சரம் எல்லாம் தெப்பமாக நனைந்துவிட்டன. வாய்எல்லாம் உப்புக் கசந்தது. யாரும் எதுவும் பேசவில்லை...பட்..பட்...பட் என்ற ஒலி மட்டும் நீரின் இரைச்சலுடன் கேட்டுக் கொண்டிருந்தது. மேலும் கீழும்... நீரின் ஆட்டம்...உப்புநீரில் விறைத்துப்போய் படகின் அடித்தளத்தில் குறண்டிப் போன உருவங்கள்..பிரயாணிகள்..படகோட்டிகள் மட்டும் படகின் நுனியில். முன்னே ஒருவன். பின்னே மற்றவன் ஒரு கை சுக்கானில்..ஏறியிறங்கும் படகுடன் அவர்களும் அந்தரத்தில் போய்வருவது போல உணர்வு...இவர்கள் துணிவின் சிகரங்கள்...மனதினால் வாழ்த்திக கொண்டேன்.
தலைமன்னாரின் விளக்கு இன்னும் தெரிந்தது.

திடீரென்று படகின் வேகம் குறைந்தது. படகோட்டிகள் தங்களுக்கிடையில் ஏதோ சங்கேதப்பாசையில் பேசிக் கொண்டார்கள்.
"நாங்கள் சாப்பிடப் போகிறோம். நீங்களும் சாப்பிடலாம்.." சுக்கான் பிடித்தவனின் குரலிது.
"நாங்கள் சாப்பிட்டிட்டம்" ஒருவர் பதிலளித்தார்.
"இனி சிலோன் நேவி எங்களை ஒண்டும் செய்ய ஏலாது. பயப்படாதேங்கோ.." முன் இருந்தவன் ஆறுதல் சொன்னான். கடற் பிராந்திய எல்லைகள் பற்றி எங்கோ படித்தது ஞாபகம் வந்தது.

www.tamilarangam.net

அவர்கள் சாப்பிடத் தொடங்கினார்கள். மீன் குழம்பு நன்றாக மணத்தது. எனக்குப் பசிக்கவில்லை.
பிரயாணிகள் சிறிது பேசிக் கொண்டார்கள். என்ன நேரம்? எவ்வளவு தூரம் வந்து விட்டோம்? இந்தியா போக எவ்வளவு நேரம் பிடிக்கும்? என்பவைதான் அவர்கள் கவலையாக இருந்தது.

"உங்களைக் கொண்டு போய் விட்டுட்டு விடியமுன் வந்திட வேணும்..அல்லாட்டி சண்டாளங்களிட்டை அம்பிட்டால்..."
"போலிசிட்டை அம்பிட்டிருக்கிறியளே..?" இது விசயமறிந்தவரின் கேள்வி.
"போன மாசம் என்னைப் புடிச்சு.."
"அடிச்சவங்களே...?
"தலை கீழாக் கட்டி..ஐயோ..அதைக் கதைப்பானேன்..இப்ப பகலிலை வெளியிலை தலை காட்டிறதில்லை..."

இவர்கள் திரும்பப் போகிறார்கள்...நாங்கள் மட்டும்.....
தலைமன்னார் விளக்கு இன்னும் தெரிந்தது.

படகு நிதானமாக ஓடியது. ஒரு இன்ஜின்மட்டும் வேலை செய்வதாக விசயமறிந்தவர் சொன்னார். பிரயாணிகளிடம் சிறிது மாற்றம் தெரிந்தது. பிரயாணிகள் பீதியகன்று தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டார்கள்.
படகோட்டிகள் தங்களுககுள் ஏதோ விவாதிததுக் கொண்டார்கள்.
"கருவாடு போட்டிருக்கு, தள்ளிப் போவோம்" என்றான் முன் நுனியிலிருந்தவன்.
"கரையிலை கருவாடு போட்டிருக்காம். வேறை இடத்திலை இறக்க யோசிககினம் போலை " என விளக்கமளித்தார் விசயமறிந்தவர்.
எட்டிப் பார்த்தேன். கரையும் தெரியவில்லை, கருவாடும் தெரியவில்லை. எல்லாம் ஒரே இருட்டு.
வடக்கில் ஒரு புதிய வெளிச்சம் தெரிந்தது. இராமேஸ்வரம் என்றார் ஒருவர். நான் திரும்பி தலைமன்னார் விளக்கைப் பார்த்தேன். இருட்டில் மங்கி மறைந்து விட்டது. எதையோ தொலைத்துவிட்ட உணர்வு மனதில் தோன்றியது.

படகு மணலில் தட்டியது. ஒவ்வொருவராக தண்ணீரில் இறங்கினோம்.
"கரைக்கு நடந்து போகலாம்..உதிலை வாடிகள் இருக்கு" என்று வழி சொன்னார்கள் படகோட்டிகள். பிரயாணிகளின் வாய்கள் நன்றிகளை முணுமுணுத்தன. என் பையில் கை விட்டு எல்லா இலங்கை நாணயங்களையும் எடுத்து ஒருவன் கையில் வைத்து நன்றி சொன்னேன்.
"பக்குவமாகப் போங்கள்" என்றான்.
படகைத் திருப்பி போவதற்கு ஆயுத்தமானார்கள்.
"பட்..பட்..பட்..." படகு புறப்பட்டது. கையசைத்து விடை கொடுத்தோம்.

கரையை நோக்கி நடந்தோம். ஈரக் கால்களில் புதிய நாட்டின் மணல் ஒட்டிக் கொண்டது.

www.tamilarangam.net

# இலக்கியச்சந்திப்பு

6வது இலக்கியச்சந்திப்பு பேர்லின் நகரத்தில் 22.12.89 தொடக்கம் 24.12.89 வரை மூன்று நாட்களாக நடைபெற்றது. இச்சந்திப்பில் 150க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். புதுமை, வெகுஜனம், தூண்டில், சிந்தனை, தேனீ, நோர்வேயிலிருந்து வெளிவரும் சுவடுகள், பிரான்சிலிருந்து வெளிவரும் கண், ஒல்லாந்திலிருந்து வெளிவரும் அ.ஆ.இ, சுவீடனிலிருந்து வெளிவரும் Lanka ஆகிய சஞ்சிகைகள் கலந்துகொண்டன.

இலக்கியச்சந்திப்பின் முதல் நாளான 22.12.89 அன்று 20.00 மணியளவில் திரு.சுசீந்திரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. அதைத்தொடர்ந்து வாசகர் விமர்சனம் என்ற பகுதி ஆரம்பமாகி, ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள் பதிலுடன் அன்றைய நிகழ்ச்சி முடிவடைந்தது.

இரண்டாவது நாளான 23.12.89 அன்று 10.30 மணிக்கு முதல்நிகழ்ச்சியாக தமிழ்மக்களின் புலப்பெயர்வு ஒரு நோக்கு என்ற தலைப்பின்கீழ் கவிஞர்.வ.ஐ.ச.ஜெயபாலன், தமிழ் மக்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பிரதேசங்களுக்கும், பின் அந்நியநாடுகளுக்கு புலம்பெயர்ந்தது பற்றி, ஆழமாகவும், எளிதில் அனைவருக்கும் புரியும்படியாகவும் விளக்கினார். அதையடுத்து திரு.பத்மமனோகரன், ஒல்லாந்தில் தமிழ்மக்கள் என்ற தலைப்பில் உரையாற்றிய பொழுது 1992 ஆம் ஆண்டு ஐரோப்பிய எல்லைக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் பொழுது ஆசிய ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஒரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோருபவர்களுக்கு நேரவிருக்கும் கஸ்டங்கள் பற்றிக் கூறினார். மதியபோசனத்தையடுத்து திரு.சிவசேகரம் மொழியும் எழுத்தும் என்ற தலைப்பின்கீழ் தமிழ் எழுத்துகளின் தன்மை, எழுத்துச்சீர்திருத்தம், தமிழ் பேச்சு, போன்ற விடயங்களைப்பற்றி விளக்கினார். அடுத்து திரு.நித்தியானந்தனால் " மலையகமக்கள் அங்கும் இங்கும்" என்ற தலையங்கத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு திருப்பியனுப்பப்பட்ட மலையகமக்கள்படும் அவலங்களை நன்றாக விளக்கினார். அதையடுத்து கவிஞர்கள் இளவாலை விஜேந்திரன், ஆதவன், ரஜீன்குமார் ஆகியோர் இணைந்து கவிதாநிகழ்வொன்றை நிகழ்த்தினார்கள். அதைத்தொடர்ந்து திரு.ந.சண்முகரத்தினம், சமதர்மம் : கனவும் நனவும் எனும் விடயத்தைப்பற்றி உரை நிகழ்த்தினார். அன்றைய நிகழ்ச்சி மலையக மக்கள் பற்றிய வீடியோ படக்காட்சியுடன் முடிவடைந்தது.

மூன்றாவது நாளான 24.12.89 அன்று திரு.சண்முகரத்தினத்தின் உரை சம்பந்தமான கேள்வி-பதிலுடன் அன்றைய நிகழ்ச்சி ஆரம்பமானது. தொடர்ந்து பெண்நிலைவாதம் என்ற தலைப்பில் ரஞ்சனி, கல்யாணி, தயாநிதி ஆகியோரால் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து வேறு பெண்களும், ஆண்களும் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இச்சந்திப்பில் அதிகளவு பெண்கள் கருத்துத்தெரிவித்தமை வரவேற்கத்தக்கது. மதியபோசனத்தையடுத்து திரு. சிவேந்திரன் சிறுகதை இலக்கியம் பற்றி உரை நிகழ்த்தினார். அடுத்த நிகழ்ச்சியாக திரு.பாலேந்திராவும், திருமதி.ஆனந்தராணியும் தமிழ் நாடகங்கள் பற்றி விளக்கி, முகமில்லாத மனிதர்கள் என்ற நாடகத்தின் ஒரு பகுதியை நடித்துக்காட்டினார்கள். இந்நாடகம் நல்ல கருத்துக்களைக் கொண்டதாகவும், ரசிக்க கூடியதாகவுமிருந்தது. அடுத்து திரு.லோகநாதன் மக்களிடம் கருத்துக்களைக் கொண்டுசெல்லல் பற்றி சில கருத்துக்களைத் தெரிவித்தார். நிகழ்ச்சிகளின் இடைவெளிகளில் தூண்டில் ஆசிரியர்குழுவைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டு, இசையமைக்கப்பட்ட பாடல்கள் பாடப்பட்டன.

அடுத்த இலக்கியச்சந்திப்பு கிரேபெல்ட்டில் நடாத்துவதாக தீர்மாணிக்கப்பட்டு, அதற்கான செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. இறுதியாக திரு.சுசீந்திரனின் நன்றியுரையுடன் சந்திப்பு முடிவடைந்தது. நிகழ்ச்சிகள் முடிவடைந்தபின் பெண்கள் சந்திப்பொன்று ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிதையில் நகைச்சுவை



## எழுத்துச் சுதந்திரம்

நடிகையின் வீட்டு
நாலு நாய்களில்
மூன்றுநாய் கர்ப்பமென்று
முதல்செய்தி வந்தது

விசாரித்தபோதுதான்
விவரம் தெரிந்தது;

அத்தனை நாய்களும்
ஆண் நாய்கள்!

## அறிதுயில்

இங்கு பலர்
உறங்குவதற்காகத்தான்
உயிர் வாழ்கிருர்கள்

குறட்டையின்
சப்தம்மட்டும்
சக்தி சொல்லியிராவிட்டால்
சத்தியமாய் இவர்களுக்குச்
சாந்தி கிடைத்திருக்கும்

## விபத்து

அந்த
டாக்டர்
ஆம்புலன்ஸ் மோதிச்
செத்துப் போனுர்.



## ஒரு கடைசிக் காதல் கடிதத்தின் கடைசிவரி

கண்ணே!
உன்
கல்யாண அழைப்பிதழை
எங்கள்
வீட்டு முகவரிக்கு
அனுப்பிவிடாதே

என் தந்தை
மிகுந்த
சந்தேகப் பேர்வழி!

## சகுனம்

வாக்களித்தவனின்
விரலில் குத்தும்
கரும்புள்ளி
பின்னுல்
அவன்
முகத்தில் பூசும் கரிக்கு
முன்னுரையல்லவா?

கவிஞர் வைரமுத்து

www.tamilarangam.net

# நெஞ்சுபொறுக்குதில்லையே.......

பெண்ஒடுக்குமுறை என்ற விடயம் இன்று பலருக்கு ஏளனத்துக்குரிய விடயமாகிவிட்டதென்று பார்க்கும்போது வேதனையாகவிருக்கின்றது. இதற்கு உதாரணமாக அன்மையில் நடந்துமுடிந்த ஆறாவது இலக்கியச்சந்திப்பில் இடம்பெற்ற பெண்நிலைவாதம் என்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட சிலரின் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. பெண்நிலைவாதம் என்ற கருத்தரங்கு இரண்டாம்நாள் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டிருந்து, அன்று நடைபெறாதுபோக, மூன்றாம்நாள் நடைபெறுமென அறிவித்தவுடன் சபையில் இருந்த ஒருவர், பெண்கள் கதைத்தால் நாங்கள் இன்றைக்கும் கேட்டுக்கொண்டிருப்போம் என ஏளனமாக கூறியதைப்பார்க்கும்போது இவர் பெண்உரிமைப் பற்றிய விவாதத்தை ஒரு பொழுதுபோக்கான விடயமாக கருதுகிறார்போல் தெரிகிறது. இந்நிகழ்ச்சியில் மூன்று பெண்களால் பெண்ணுரிமைப் பற்றிய கட்டுரைகள் வாசிக்கபட்டு முடிவடைந்ததுதான் தாமதம், பெண்களுக்கு பேசுவதற்கு இடமளிக்காமல் பல ஆண்கள் தங்கள் கருத்துகளைக் கூற ஆரம்பித்தார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களை வரிசைப்படுத்தினால் பெண்விடுதலைக்கு எதிராண கருத்துக்களே கூடுதலாகவிருந்தது. பெண்கள் ஒடுக்கப்படவில்லை, அவர்களுக்குச் முழுச்சுதந்திரம் இருக்கின்றபடியால் தானே கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதுகிறார்கள் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. அப்படிக் கூறுபவர்கள் அதிகமான ஆக்கங்களின் கருப்பொருள் பெண்ஒடுக்குமுறையைப் பற்றி அமைந்திருப்பதை அவதானிக்க மறந்துவிடுகிறார்கள். பெண்கள் அழகு பொருட்களாக, பிள்ளை பெறும் இயந்திரங்களாக பாவிக்கப்படுவதுபோல் இப்போது பெண்விடுதலைக்கு குரல் கொடுக்கும் இயந்திரமாக பாவிக்கபபடுவர்களா? என அச்சம் கொள்ளவேண்டியுள்ளது என கூறியவரின் கருத்து பெண்விடுதலையை முற்றாக விளாங்காத தன்மையையே காட்டியது. பெண்விடுதலைப் பற்றி பரிமாறப்பட்ட கருத்துக்களை ஒருசிலர் மட்டுமே அவதாணித்துக்கொண்டிருந்தார்கள். அதிகமானவர்கள் அதை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக கணிக்காது, இடத்தைவிட்டு எழுந்துபோதல், சிரித்தல், தமக்குள் விவாதிப்பதுமாக நிகழ்ச்சியை குழப்பிக்கொண்டிருந்தார்கள். இவற்றை கவனித்துக்கொண்டிருந்த இருவர் "இரண்டுநாட்களாக நிகழ்ச்சிகள் யாவும் அமைதியாக நடைபெற்றன. என்ன பெண்கள் தானே கதைக்கிறார்கள்என்ற அர்த்தத்தில் இவ்வாறு இடையூறு இழைக்கிறார்கள் " என கருத்து தெரிவித்தனர். இந்த நடவடிக்கைகள் அவர்களில் ஊறியிருந்த ஆணாதிக்க பிற்போக்குத்தன்மையையே காட்டியது.

பெண்கள் தங்கள் உரிமைகளைப்பற்றி சிந்திப்பதால் தமிழ் இனத்திற்கே அழிவு வந்துவிட்டதென்றும் இவர்களிடம் தீயசக்திகள் ஊடுறுவிவிட்டதெனவும், சில பிற்போக்குவாதிகள் கூச்சலிடுகிறார்கள். பெண்நிலைவாதத்தைப் பற்றி பேசுவது "(f)பஷனாக" போய்விட்டதென்றும், இது தேவையில்லாத விடயமாக போய்விட்டதென்று அபிப்பிராயப்படுபவர்களுக்கு, இனஉரிமைகள் பற்றி பேசுவதுவும் "(f)பஷனாகத்" தான் இருக்கும்.

தொடர்ந்து இலக்கியச்சந்திப்பில் கலந்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு , தங்கள் கருத்துக்களை துணிவுடன் கூற முன்வருவது தீயசக்திகளின் ஊடுறுவல், "(f)பஷன்" என்று கூறும் ஆணாதிக்கவாதிகளின் கண்களைத் திறக்கும் என நம்புகிறேன்.

ஊர்க்குளவி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

தேனீக்களுக்கு!

வணக்கம். "அவள் பொதுவுடமையாக்கப்பட்டாள்" என்ற எனது , கவிதைமீது வைக்கப்பட்ட விமர்சனமானது " மிகவும் சரியானதே! எனது தவறான பார்வையை வெட்கமின்றி ஒத்துக்கொள்கிறேன். இனிமேல், இவ்வகையான தவறுகள் நேராது என்பதை தமிழ்மக்களுக்குத் தெரியப் படுத்தி - தவறுக்கு மன்னிப்புக்கோருகிறேன்.

கவிதாஞ்சலி, நூறன்பேர்க்

அன்புடன்(தானிடத்தைப் பிடிப்பார்) விமர்சகருக்கு,
"உருவம், முப்பது நாற்பது வருடங்களுக்கு முற்பட்ட வித்துவ மொழித்தன்மையதான சொல்வரிப் பிரயோகங்கள் மரபுக்கவிதையைப் புதுக்கவிதையாக்கியது போல்"
"உருவம்", என்பது கவிதையின் உருவமா?, மொழிநடை உருவமா?, அன்றி ஆக்கியோன் உருவமா? என ஐயுறும் வகையில் அமைந்துள்ளது. முப்பது நாற்பது வருடங்களுக்கு முற்பட்ட மொழிக்குத்தான் வித்துவத்தன்மை உண்டு, இன்றைய மொழிக்கு இல்லை என்பது போலவும் விமர்சனம் தொக்குநிற்கின்றது. சொற்களின் கூட்டம்தான் வரிவடிவாக அமைதல் மரபு. இது மரபுக் கவிதைக்கோ, புதுக்கவிதைக்கோ புறமபல்ல. மரபுக்கவிதைக்கென தமிழ் இலக்கண விதிமுறைகள் உண்டு. ஆகவே அதைப் புதுக்கவிதையாக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அத்துடன் மரபுக்கவிதையின் சொற்பிரயோகங்களை புதுக்கவிதை ஏற்றுக்கொள்ளாதென்பதும் இல்லை. எதற்கும் மொழியறிவு வேண்டும். மொழியறிவுதான் மொழியை வளம்பெறச் செய்கிறது. அதைக் கையாளல் தங்களைப் போன்று ஒவ்வொருவருக்கும் தனி இயல்பு. இதன் அடிப்படையிற்றான் மொழி வித்துவம் பெறுகின்றது. இது மொழியின் சிறப்பும் கூட.
"சமுகத்தோடு ஒட்டாமல் அந்நியமாகிநின்று சபிக்கும் முனிவத்தன்மையோடு நிலைமையை விளக்கவருவது இன்றைய வளர்ச்சியிலிருந்து பின் நிற்கின்றது."
முன்னர் மொழிநடை முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்டதென்ற விமர்சகர் இன்றைய வளர்ச்சியில் பின் நிற்கின்றது என்பது எதை? கல்விமான்களையே அழிக்கும் கொலைகலாச்சாரம் கோலோச்சி , கல்வி நிலையழிந்து , மொழியறிவும் தேய்வுற்று , பேச்சவழக்கே எழுத்து மொழியாகி சிதைந்த சிதைகளை மொய்க்கும் ஈ, எறும்பாக வரும் எழுத்தும், சொல்லும், பிறமொழியின் தேவையற்ற பேராதிக்கமும் தமிழ் மொழியின் இன்றைய வளர்ச்சியா? அல்லது ஐரோப்பாவில் எழுததுருவில் வரும் கவிதைகளின் தொகைகளை எண்கணக்கில் வளர்ச்சியென்கின்றாரா? அன்றி இவை இரண்டிற்கும் நிலைக்களமான சமுகத்தின் நிலைகை வளர்ச்சியென்கின்றாரா? அது அவருக்குத்தான் வெளிச்சம். "சமுகத்தோடு ஒட்டாமல் அந்நியமாகி" என்ற சொற்பிரயோகம் எதன் அடிப்படையில் எழுகின்றது. அவர் கருதும் சமுகம் எது? பேசும் மொழியால் ஒன்றாகி , செய்தொழில்வகையால் பலவாகிய சாதியின் அடிப்படையிலான சமுகக்குழுக்கள்; இணைய முடியாத உள்முரண்பாடுகளை வழக்கங்களாக்கிய ஒற்றுமையற்ற நம் தேசத்தின் தமிழ் சமுகத்தில் வெட்டும், கொத்தும், குழிதோண்டலும், அச்சமும், பீதியும், கொள்ளையும், கொலையும் மலிந்த நாளாந்த நடைமுறையை வாழ்க்கையாக்கிக்கொண்ட மக்கள் கூட்டத்தோடு ஒட்டவில்லையா? அல்லது உழைப்புக்காக உதிரிகளாகி , கண்டம் விட்டுக் கண்டம் தாவி , பண்டம் பெறவென அகதிப்பாத்திரம் தாங்கி , திகதிகள் எண்ணி, சிதறிப்பதறி , ஒருவரோடொருவர் நேயம் இன்றி , எங்கும் ஒட்டாமல் அந்நியமாகி , கற்பனை நிறைந்த

www.tamilarangam.net

சொற்பனத்தில் காணும் சுவர்க்க வாழ்வுக்கு இலக்கானோரைத் தம் கற்பனாவாதத்தால் ஐரோப்பிய தமிழ் சமூகமாக கண்டு , திரிசங்கு சுவர்க்கம் படைக்க முயலும் முனிவர்களின் சமூகத்தோடு ஒட்டாமல் அந்நியமாகி உள்ளதா? என்பதை விமர்சகர் இனிமேல் புரிந்து கொள்ளட்டும்.
உள்ளீடு சரியானது. அவரே ஒப்புக்கொண்டுள்ளார். மகிழ்ச்சி.

படை, எசன்

அன்புள்ள தேனீ ஆசிரியர்குழுவிற்கு,
மேற்கு ஜேர்மனியிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும் , வாசகர்களும், கூட்டுச்சேர்ந்து ஆத்மார்த்தமாக இலக்கியப்பணியினூடாக மேன்மேலும் தமிழ்ச்சமுதாயத்தை நாகரீகமான சமுதாயமாகவும், அறிவு வளர்ச்சியில் மேன்மேலும் முன்னேற்றவேண்டும் என்ற அடிப்படையில் இலக்கியச்சந்திப்பு என்ற ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளார்கள்.

இயல், இசை, நாடகம் என்கின்ற மூன்று அம்சங்களையும் தனக்கென்ற தனித்துவத்துடன் உள்ளடக்கிய சிறப்புத்தன்மை பெற்ற மொழியே தமிழ் மொழியாகும். மிகப்பழமைவாய்ந்த மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். தனிச்சிறப்புக்களை உள்ளடக்கிய மொழி என்பதாலேயே தமிழ்மொழியும் சர்வதேச மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பெற்றது. தமிழர்களாகிய நாம், பெருமைப்படக்கூடியதாகும். தமிழர்கள் தம்மைத்தாமே ஆராய்ந்து புரிந்துகொள்ளாமல், அதனுடைய சிறப்புத்தன்மைகளை விளங்கிக்கொள்ளாமல் அந்நியமொழிகளையும், அந்நியரின் கலை, கலாச்சாரம், தத்துவங்களினால் கவரப்பட்டு அன்னிய மோகம் கொண்டு அலைவதிலேயே புதிய புதிய பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

இன்று மேற்குநாடுகள் எவ்வளவு தான் பொருளாதார ரீதியாக வளர்ந்தாலும்கூட அவர்கள் தங்களுடைய கலை, கலாச்சாரம் , பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்காகப் பலகோடி ரூபாய்களை செலவு செய்கின்றார்கள். இதற்கு ஒரு சிறு உதாரணத்தை காட்டமுடியும்.

மேற்குஜேர்மனியிலுள்ள பழமைவாய்ந்த கட்டிடங்களை அவர்கள் அழித்துவிடாமல் தனியார்கட்டிடமாக இருந்தாலும் அதைப் பாதுகாப்பதற்கான பணவசதிகளை அரசு கொடுத்து உதவி கட்டிடங்களைப் பாதுகாத்து வந்துள்ளார்கள். அதேபோல் குறிப்பாக பாவேரியா bayern என்ற மானிலத்தவர்கள் தமக்கென்ற தனித்துவமான (உடை, ஆண், பெண் இருபாலருக்கும் உரியது ) இசை, கலாச்சாரம் போன்றவற்றை எவ்வளவு தூரம் பாதுகாத்து வருகிறார்கள் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். ஒவ்வொருநாளும் , ஒவ்வொரு இனமும் தனக்கென தனித்துவம் வாய்ந்த அம்சங்களை உள்ளடக்கியிருப்பதை ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

எமது தமிழ் மொழியின் சிறப்பு அம்சங்களை, ஐரோப்பியரும், மேற்கத்தியரும் புரிந்துகொண்ட அளவிற்கு தமிழர்களாகிய நாம் புரிந்து கொள்ளாதது வேதனைக்குரிய விடயமே. இன்று ஐரோப்பிய சர்வகலாசாலைகளிலும் தமிழ்மொழியை பாடமாக படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. விரும்பியவர்கள் படிக்கலாம். மற்ற தமிழ்

www.tamilarangam.net

இலக்கிய புத்தகங்கள் அந்தந்தச் சர்வகலாசாலையிலுள்ள வாசிகசாலையில் சுலபமாகப் பெறக்கூடியதாகவிருக்கின்றது. (உ+ம்: tubingen என்னுமிடத்தில் அமைந்துள்ள வைத்தியச்கலாசாலையில் இருக்கும் வாசிகசாலையில் பல இலக்கிய நாவல்களை நாம் நாம் பெறக்கூடியதாகவுள்ளது. )

இனி விடயத்திற்கு வருவோம். மேற்கு நாடுகளுக்கும் , ஐரோப்பாவிற்கும் அரசியல் காரணத்தையிட்டு இலங்கையிலிருந்து குறிப்பாக யாழ்குடாநாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் புலம்பெயர்ந்து இங்கு வாழ்கிறார்கள் .

கடந்த 6வது இலக்கியச்சந்திப்பு பேர்லின் மாநகரத்தில் நடைபெற்றது.பல நாடுகளிலிருந்து தமிழர்களும் பேராசியர்களும் கலந்து கொண்டார்கள். மூன்றுநாள் நடந்த இலக்கியச்சந்திப்பில் குறிப்பாகச் சொல்வதானால் பேராசியர்.நித்தியானந்தனின் "இலங்கை மலைகளும் இந்திய மடுக்களும்" என்ற தலைப்பில் மலையக மக்களின் துயரங்கள் ஆறாத வடுக்களாய் இன்றும் இதயத்திலிருந்து இரத்தமாக கசிந்து கொண்டிருக்கும் பல லட்சம் மக்களின் கண்ணீர்க்கதையும் அதற்கான காரணகர்த்தாக்களில் ஒருவரான மூத்த தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் துரோகத்தனமும் சிந்திக்கத்தவறியதால் தான் நாம் அதன் பிரதிவிளைவுகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது!

இரண்டாவதாக பெண்விடுதலை பற்றிய விவாதம் மிகக் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் இலங்கையில் நம்மவர்கள் மொழிக்காகவும், கலை,கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் இன்று பல ஆயிரக்காணக்கான உயிர்கள் போராட்டத்தினால் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களில் ஒருசில அரைவேக்காடுகள் அரைகுறையாக ச் சில தத்துவங்களை தவறாக புரிந்துகொண்டு நடத்திய விவாதங்களைப் பார்க்குமிடத்து தீயசக்திகள் திட்டமிட்டே பெண்விடுதலை எனும் பெயரில் எமது தேசிய இனத்தையும், தேசியவிடுதலைப்போராட்டத்தையும் சீரழிக்க முயற்சிக்கின்றார்களா? என்ற சந்தேகமே தமிழ் அபிமானிகளிடையே தோன்றியுள்ளது. இவ்விடயத்தில் தமிழர்களாகிய நாம் மிகவிழிப்பாக இருக்கவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

குமார் றொய்யிற்லிங்கன்

எமது பதில்..

ஐரோப்பாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் கூட பெண்உரிமைப்பற்றிய விவாதங்கள் எழத்தொடங்கிவிட்டதென்பதை தொடர்ந்து இலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளைப் படிப்பவர்களும் , நாட்டுநடைமுறைகளுனுடன் தொடர்பு வைத்திருப்பவர்களும் அறிவார்கள். எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் பெண்விடுதலை பிணைந்திருப்பது தவிர்க்கமுடியாததாகும். இதை அறியாமல், ஈழப்போராட்டத்திலிருந்து பெண்விடுதலையை வேண்டுமென்று பிரித்து பார்ப்பதுதான் அரைவேக்காட்டுத்தனமாக நமக்கு தோன்றுகிறது.

தேனீக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணிலை வாதம், பெண் விடுதலை --ஒரு நோக்கு

**இன்று ஏனைய தெற்காசிய நாடுகளான இந்தியா, பங்களா தேஷ், பாகிஸ்தான் போன்று இலங்கையில் பெண்ணடிமைத்தனம் உக்கிரமாக இல்லை. அதற்காக முற்றாக நீங்கிவிட்டது என்றும் கூற முடியாது.**

பெண்ணிலை வாதம், பெண் விடுதலை தொடர்பான ஆரோக்கியமான கருத்துக்கள் இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் முன்வைக்கப் பட்டு வருகின்றன.

எமது நாட்டில் கூட பெண் விடுதலை பற்றிய சிந்தனைகள் இளைய தலைமுறையினர் மத்தியிலே வரவேற்பை பெற்றுள்ளது. ஆனால் பெண்ணிலை வாதம், பெண் விடுதலை குறித்த சரியான விளக்கமோ, அறிவோ எம்மத்தியில் காணப்படும் பெண்கள் அமைப்புக்களிடம் இல்லை.

குறிப்பாக பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகள் ஆண்களிடையே எரிச்சலூட்டுவதாகவே உள்ளது. இவ்வமைப்புக்கள் தமது பெண்கள் சார்பான பிரசாரத்தை ஆண்கள் எதிர்ப்பு வாதமாக்க முயல்கின்றன. பெண் விடுதலை என்பது பெண்களுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இது ஓர் சமுதாயப் பிரச்சினை.

பெண் ஒரு மனிதஜீவி ஆணுக்கு உள்ள சகல உரிமைகளும் அவளுக்குமுண்டு எந்த வகையிலும் அவள் ஆணைக் காட்டிலும் தாழ்ந்தவள் அல்ல. அதேபோல் தெய்வீகத் தன்மை பொருந்திய கற்பனை வாதப் பொருளுமல்ல. கீழைத்தேய நாடுகளிலேயே பெண்ணடிமைத்தனம் கூடுதலாகவுள்ளது.

இங்கேயே பெண்களை தெய்வமாக உருவகப்படுத்தி வழிபடும் முறைமையும் நிலவுகிறது.

புராண நாயகிகளான கண்ணகி, சீதை, சாவித்திரி என பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவர்களில் யார் கற்பில் சிறந்தவள் என அலசி ஆராய்வதிலேயே இன்னும் நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். தற்காலத்துக்குரிய முறையில் யதார்த்த பூர்வமான சிந்தனைகள் எம்மிடையே தோன்றுதல் வேண்டும்.

பெண்ணிலை வாதம் தொடர்பான புதிய சிந்தனைகள் இளைய தலைமுறையினரிடையே ஓரளவு விரவியுள்ளது என்பதனை முற்றாக நிராகரித்து விட முடியாது.

இது விடயத்தில் பெண்கள் அமைப்புக்கள் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்பது வெள்ளிடைமலை.

பெண்கள் அமைப்புக்களில் பதவிகள் வகிக்கும் பல சகோதரிகள் இன்று எமது பிரதேசத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெளிவில்லாதவர்களாகவுள்ளனர்.

நீண்ட காலமாகவே ஆண்கள் சீதனம் என்ற பெயரில் பெருந்தொகையினை திருமணத்தின் போது பெண்ணின் பெற்றோரிடம் வாங்கும் முறை நிலவுகிறது. இது நீக்கப்பட வேண்டியது. யாரும் இம் முறையை நியாயப்படுத்த முடியாது.

எமது சமுதாயத்தில் சீதனப் பிரச்சினை மிக ஆழமாக வேர் விட்டுள்ளது. பெண்கள் அமைப்புக்கள் பல இது குறித்து குரல் கொடுக்கின்றன. குரல் கொடுப்பதோடு சரியாகி விடுமா? ஆண்கள் சீதனம் வாங்கக் கூடாது எனக் கூச்சல் போட்ட இவர்களே பின்னர் தங்கள் அந்தஸ்துக்கும் மேலாக சீதனம் கொடுத்து டாக்டரையோ, எஞ்சினியரையோ வாங்கிக் கொள்கிறார்கள். இவர்கள் எல்லாம் எதற்காக தம்மை சீர்திருத்த வாதிகளாக காட்டிக் கொள்கிறார்கள்? சமூகத்தில் பேரும் புகழும் எடுக்க வேண்டும் என்ற ஆசைதான் வேறொன்றுமில்லை.

உலக அரங்கில்

உலகில் இன்று வளர்ச்சியடைந்த நாடுகளைக் காட்டிலும் வளர்முக நாடுகளிலேயே பெண்ணடிமைத்தனம் கூடுதலாகவுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சோசலிச அமைப்புடையவைகளில் பெண்ணடிமைத்தனம் விரவியதாக இல்லை.

பெண்களின் கல்விநிலை எங்கெல்லாம் உயர்வாகவுள்ளதோ அங்கெல்லாம் சமுதாயத்தில் அவர்களது நிலையும் உயர்வாகவே உள்ளது.

எமது நாட்டிலும் வடபகுதியில் இன்று இதனை அவதானிக்க முடிகிறது. போராட்டங்கள் காரணமாக இறந்தவர்கள் சொந்த நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளால் வாழ வழியின்றி வெளிநாடு சென்றோர் என இளைஞர்களின் எண்ணிக்கை குறைவடைந்த நிலையில் பெண்களே ஆண்கள் புரியும் பணிகளையும் நிறைவேற்றவேண்டியவர்களாகவுள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் அரைவாசிக்கும் கூடுதலாக பெண்களே கல்வி பயில்கின்றனர்.

பெண்கள் அறிவு மேம்பட்டுள்ள நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவே உள்ளது. இதற்கு காரணம் படித்த பெண்கள் ஒன்றோ இரண்டோ பிள்ளைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள விரும்புவதில்லை. இதனால் இந் நாடுகளில் சிசு மரண வீதம் குறைவாகவும், ஆயுட்காலம் கூடுதலாகவும் உள்ளது.

வரலாற்றுப் பின்னணி

சேர் கென்றிமெயின் என்ற அறிஞரின் கருத்துப்படி ஆதிகாலத்தே உருவான சமுதாய உறுப்பு குடும்பம். இக் குடும்பத்திலே ஆண்தலைமை முக்கியம் பெறுகிறது. ஆண்குடும்பத்துக்கு தலைமை தாங்கினான் என்பதே கருத்தாகும். ஏனைய ஆண், பெண், குழந்தைகள் ஆணின் தலைமையை ஏற்றனர். குடும்பத்தலைவனான ஆணின் ஆதிக்கம் குடும்பம் முழுவதும் பரவிக் காணப்பட்டது. நாளடைவில் இக் குடும்பம் பல குடும்பங்கள் ஆகின்றது.

அப் பிரிந்த குடும்பங்களிலும் ஆணே தலைமை தாங்குகிறான். இவ்வாறு ஒரு குடும்பத்தில் பல குடும்பங்கள் தோன்றின. ஒரு குடும்பத்தில் இருந்து பல தோன்றியதால் உறவில் ஒன்றுபடுகின்றன. உறவுகள் சேர்ந்து இனமாக பரிமாணம் அடைகின்றன. குடும்பங்களில் வயது முதிர்ந்தவன் தலைவனாக மதிக்கப்படுகிறான். இவ் ஆண் தலைமை தாங்கிய குடும்பங்களில் பெண்ணுக்கு உரிமை கிடையாது. அவள் அதிகாரம் அற்றவள் ஆகின்றாள், அடிமை நிலையில் இருந்துள்ளாள். எந்நிலைமையிலும் பெண் முக்கியத்துவம் பெறாமையால் ஆண் தலைமை மேலோங்குகிறது. குடும்பத்தில் மூத்த ஆணுக்கு எல்லோரும் கட்டுப்படுவதால் அவனை அடிப்படையாகக் கொண்டு அரசியல் வாழ்வு உருவாகிறது.

(15ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புத்தாண்டே எழுந்து வருக !

புத்தாண்டே எழுந்து வருக !
புதுயுகம் காணத்துடிக்கும்
புரட்சிக் குழுக்களிடையே
புரிந்துணர்வை வளர்த்திடு
தளிர்விடும் மழலைகள் தவழும்
தமிழ்த்தாய் மண்ணிலே
எழுந்திட்ட புரட்சிக்காய்
சிந்துகின்ற குருதியை நிறுத்திட
புத்தாண்டே எழுந்து வருக!

உலகெங்கும் உலாவுகின்ற
வசந்தமான காற்றதனை
ஈழத்துக்கும் அழைத்து வந்து
துன்பத்தில் வளர்ந்து வரும்
இன்பமறியா ஈழக்குழந்தைகள்
மகிழ்வுறும் நன்நாளாக
புத்தாண்டே எழுந்து வருக !

ஏர் பிடித்து பயிரிட்டு
ஏற்றமுடன் தினமுழைத்து
பார் முழுதும் உணவளிக்கும்
பாட்டாளி மக்களிடம்
உலகதனை ஒப்படைக்கும்
திருநாளை அழைத்துக்கொண்டு
புத்தாண்டே எழுந்து வருக!

**வி.கண்ணன்**

# ஜேர்மன் தமிழ் அகதிகள் உதவி நிறுவனம்

மேற்கு ஜேர்மனியில் வாழும் சகல தமிழ் அகதிகளின் நலன் கருதி, ஜேர்மன் அகதிகள் உதவி நிறுவனம், பொன் நகரில் " தமிழ அகதிகள், மனித உரிமை, சக, பொதுநல " அலுவலகம் ஒன்றினை, பொன் பிரதான புகையிரதநிலையத்திற்கும் காரள்லான்ட் பொருட்காட்சிச்சாலைக்கும் இடையிலுள்ள கொள்மான்ட் வீதி 5ம் இலக்கத்திலுள்ள கட்டடத்தில், அன்மையில்ஸ்தாபித்துள்ளனர்.

தமிழ் அகதிகட்கு கீழ்கண்ட ஆலோசணைகளும், நீண்ண கால கண்ணோட்டத்துடன் பயனுள்ள உதவிகள்.

* உள மன ரீதியான நீண்டகால பராமரிப்பு.
* தமிழ் அகதிகட்கு அவரவர் தகுதி திறமைகேற்ப வேலைவாய்ப்பு, தொழிற்கல்வி, தொழில்நுட்ப பயிற்சிகள் ஏற்பாடு.
* ஜேர்மன் மொழி பயில ஒழுங்குகள்.
* பல துறைகளை உள்ளடக்கிய ஒரு கொடுத்துதவும் தமிழ் நூலகம்.
* தமிழ, ஆங்கில மொழியில் உள்ள சான்றிதழ்கள் ஜேர்மன் பாஷையில் மொழிபெயர்ப்புச்சேவை.
* வீடு தேடுதல், மற்றும் அலுவலகங்களில் ஏற்படும் மொழி மற்றும் இன்ன பிற சிக்கல்கள், பிரச்சனைகளைத் தீர்த்துவைத்தல்.
* ஜேர்மனியில் பல பாகங்களில் வாழும் நெருங்கிய உறவினர்களை, ஒரே நகரில் அல்லது மாகணத்தில் வாள ஏற்பாடு செய்தல்.
* சொந்த நாட்டிலோ, அல்லது வேறு நாட்டிலோ விடுபட்டு வந்த உறவினர்களை மூன்றாவது நாடுகட்குச் சட்டரீதியாக குடிபெயர ஏற்பாடு செய்தல்.
* தாய்நாட்டிற்குச் சுயவிருப்பத்தின் பேரில் திரும்பிச் செல்ல விரும்புவோருக்கு இலவச டிக்கட், பணஉதவி, தாய்நாட்டை அடைந்ததும், தம்மை திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டுவர பலவிதமான

www.tamilarangam.net

புனருத்தாரண உதவிகளை, ஐ.நா. அகதிகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்தல்.

செய்தி, தகவல் சேவை.

* பத்திரிகைச் செய்தி தொகுப்புகளின் ஆவணகாப்பு.
* பத்திரிகைச் செய்தி தொகுப்பு வெளியீடு.
* பத்திரிகைச்செய்தி சேகரிப்பு , பாதுகாப்பு, விநியோகம்.
* கருத்தரங்கு, விவாதங்கள், விரிவுரைகள். கூட்டங்கள், மகாநாடுகள், ஆலோசனைக்குழுக்கள்.
* ஜேர்மன் மக்கள்-தமிழ் அகதிகள் உறவுகள், தொடர்புகள் பலப்படுத்தல்.

அலுவலக நேரங்கள்.

திங்கள், செவ்வாய், வியாழன்.காலை 11.00 முதல் 18.00 வரை.

செவ்வாய் மாலை 18.00 முதல் 20 வரை.

வெள்ளி காலை 9.00 முதல் பகல் 12.00 வரை.

மேலதிக விபரங்கட்கு:
TAMIL REFUGEES HUMAN RIGHTS
& WELFARE COMMITTEE
c/o.D.F.HILFE BONN E.V.
COLAMANT STR.5
5300 BONN-1
WEST GERMANY.

13 பக்கத்தொடர்ச்சி

அதிகாலம் தொட்டு மனித இனத்தில் ஆண் மேலாதிக்கமே நிலவுகிறது என சேர் சென்றிமெயின் கூறியபோது. இதற்கு மாறாக பண்டைக் காலம் பெண் மேலாதிக்கம் தான் நிலவியது என்ற கருத்தை அறிஞர் மக்லன் முன் வைக்கிறார்.

மனித இனம் தோன்றிய காலத்தே குடும்பங்களுக்கு ஆண் தலைமை கிடையாது. அக் குடும்பம் முழுவதையும் இணைத்தவள் ஆதிக்கம் செலுத்தியவள் பெண் என்பது இவரது கோட்பாடு.

முதலில் விலங்குகள் போன்ற வாழ்க்கையை ஆரம்பித்த மனிதன் பால் உணர்வால் பெண்ணை அடையும் நிலை உருவாகியது.

கால ஓட்டத்தில் விலங்குகளாக வாழ்ந்தவன் பின் விலங்குகளை வளர்க்கும் பரிணாம நிலைக்குள்ளாகிறான். இவ் வாழ்க்கைக்கு பெண் உதவி தேவைப்பட்டது எனவே அவள் கூடிய முக்கியத்துவத்தினை அக்காலம் பெற்றாள்.

நடைமுறை வரலாற்றில் இது நடைபெற்றதா என்பதில் சந்தேகம் இருப்பினும் சில வரலாற்றுக் காரணங்களால் இதனை முற்றாக நிராகரித்து விடவும் முடியாதுள்ளது.

### இன்றைய நிலை

இன்று ஏனைய தெற்காசிய நாடுகளான இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்று இலங்கையில் பெண்ணடிமைத்தனம் இல்லை. அதற்காக முற்றாக நீங்கி விட்டது என்றும் கூறமுடியாது.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் வரதட்சணை பிரச்சினைகள் காரணமாக நாளாந்தம் எவ்வளவோ பெண்கள் இம்சைப்படுத்தப் படுகிறார்கள். ஏன் கொலைக்கும் ஆளாகிறார்கள்.

பங்களாதேஷிலோ பெண்கள் அடிமைகளாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படும் கொடுமை நிலவுகிறது. இதனைத்தடுக்க அந் நாட்டு அரசாலும் முடியவில்லை.

ஒப்பீட்டு ரீதியில் இலங்கையின் பெண் அடிமைத்தனம் இந் நாடுகளைப் போன்று இல்லை. இதற்கு காரணம் பெண்கள் கல்வி நிலையில் மேம்பட்டுள்ளமையே.

வெறும் நாவீச்சுக்களால் மட்டும் பெண் விடுதலை கிடைத்து விட மாட்டாது. பெண்கள் மத்தியில் ஏற்படும் முற்போக்கான சிந்தனைகளின் செயற்பாடுகள் மூலமே பூரண விடுதலையை அடைய முடியும். பெண்களின் விடுதலை பெண்களின் கைகளிலேயே.

—தமிழினி

நன்றி : வீரகேசரி

தேனீயில் வெளியாகும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளிகள்.

தேனீக்கள்



அட்டைப்படக்கவிதை நன்றி :திசை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக உதைபந்தாட்டப் போட்டி1990

சி.சிவநேசன்

ஏறக்குறைய 1600 ஆண்டளவில் உதைபந்தாட்டம தோன்றியதாக அறியப்படுகிறது.பின் 1863 ஆம் ஆண்டளவில் உலக உதைபந்தாட்ட சபை ஸ்தாபிக்கப்பட்டு,அதன் ஒழுங்கு ,விதிகளுக்கமைய உதைபந்தாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.அமெரிக்கா தனக்கென்று தனியாக உதைபந்தாட்ட விதிகளை அமைத்து இவ்வளவு காலமாக விளையாடி வந்தது.ஆனால் இன்று உலகவிளையாட்டு ஒழுங்குவிதிகளுக்கமைய விளையாடுவதற்கு இணங்கி,முதல்முதலாக 1990 இல் போட்டியில் கலந்து கொள்வது மிகவும் விசேடமாகவுள்ளது.

இவ்வுலக உதைபந்தாட்டப் போட்டியானது நான்கு வருடங்களுக்கு ஒருமுறை உலகஉதை பந்தாட்ட சபை தெரிவு செய்யும் நாடுகளில் நடைபெற்று வருகினது.இம்முறை (1990)இத்தாலி நாட்டில நடை பெறவுள்ளது

இப்போட்டி ஆரம்பமாவதற்கு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்பே தகுதியுள்ள நாடுகளை தெரிவு செய்வதற்காக ஆங்காங்கே போட்டிகள் நடைபெறுவதுண்டு. இம்முறை 24 நாடுகள தகுதியுள்ளவையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

போட்டி விதிகளின்படி உலகஉதைபந்தாட்டப்போட்டி நடைபெறும் நாடானது தேர்வின்றியே, பங்குகொள்ள அனுமதிக்கப்படுகின்றது.

இம்முறை பங்குபெறும் 24 நாடுகளும் 6 குழுக்களாக வகுக்கப்பட்டுள்ளன.

இப்போட்டியானது 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆம் திகதி, ஆர்ஜன்டீனா-கமாறுன் விளையாட்டுடன் தொடங்கி 1990 ஆண்டு யூலை மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிடும்.

தொடரும் முக்கிய போட்டிகள்:

10.6.1990 மே.ஜேர்மனி-யூகோஸ்லோவியா 21 மணி.

15.6.1990 மே.ஜேர்மனி-வீ.ஏ.எமிரேட் 21 மணி.

19.6.1990 மே.ஜேர்மனி-கொலம்பியா 17 மணி.

நடைபெற்ற ஆண்டுகளும்,நாடுகளும்

| | | | |
|---|---|---|---|
| 1930 | உருகுவே | 1974 | மேற்கு ஜேர்மனி |
| 1934 | இத்தாலி | 1978 | ஆர்ஜன்டீனா |
| 1938 | பிரான்ஸ் | 1982 | ஸ்பெயின் |
| 1950 | பிரேசில் | 1986 | மெக்ஸிக்கோ |
| 1954 | சுவிற்சர்லாந்து | 1990 | இத்தாலி* |
| 1958 | சுவீடன் | | |
| 1962 | சிலி | | |
| 1966 | இங்கிலாந்து | | |
| 1970 | மெக்ஸிசிக்கோ | | |

| A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|
| இத்தாலி | அஜன்டீனா | பிரேசில் | மே.ஜேர்மனி | பெலஜியம் | இங்கிலாந்து |
| ஆஸ்திரியா | காமாரூன் | சுவீடன் | யூ.ஸ்லோவியா | தென்கொரியா | அயர்லாந்து |
| அமெரிக்கா | ரஷ்யா | கொஸ்டாரிகா | வீ.ஏ.இமிரேட் | உருகுவே | ஒல்லாந்து |
| செ.ஸ்லோவியா | ருமேனியா | ஸ்கொட்லாந்து | கொலம்பியா | ஸ்பெயின் | இஜிப்த் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உணர்வுகள்

தூரிகையின்
கோடுகளாலும் கோலங்களாகவும்
கிறுக்கப் படும்
ஓவியம் போலவே
வாழ்வு

சிரிக்க வேண்டும்
என்ற
உணர்வில்
அதில் கூட
வாழ்வின் அர்த்தங்கள்

காலக் கரும்பலகையில்
எமது சரித்திரத்தை
எழுதியெழுதியே
மரித்துப்போகும்
வெண்கட்டிகளாய்
எத்தனை பேர்
விடுதலையின் இதயத்துடிப்பானார்
இன்னமும் சிரிக்காத
வரலாறோ
மேலும்
உயிர் கேட்டமும்

பூமியை அணைத்து
முடிவில்லாத் தூரமாய்
இன்னமும் காத்திருக்கின்றது வானம்....
நம்பிக்கையென்பது
முட்டையை அலகால் திறந்து
வெளிவரும் சிறு குருவிக் குஞ்சைப்
போன்றது

கனவுகளுக்கு பாலூட்டிடும்
என் தாய் மண்ணில்
உடலில்லாத்தேவதையாய்
ஓடி வந்து முத்தமிட்டு
காதோரம்
பாட்டுச் சொன்ன காற்று
குளிரைச் சபிக்கும்
அகதித் தரையில்
எனை அலட்சியம் செய்து
உடலைக் கடிக்கையில்
வாழ்வை இழந்த
உணர்வை அடைந்தேன்

வசந்தத்தை விரட்டும்
கொடும்பனிக்கால இரவுகளில்
நீண்ட சோகத்திலும்
துயரில் நசுங்கிடும் கணத்த
பொழுதுகளிலும்,
உறங்காத உணர்வுகளில் கூடு கட்டும்
நம்பிக்கைகள்.
இன்னமும் சிரிக்காத
வரலாறோ
மேலும்
உயிர் கேட்டமும்

துர்க்கா.

www.tamilarangam.net



# குருஷேத்திரத்திலிருந்து கம்யூனிசம் வரை



ப.வி.ஸ்ரீ ரங்கன்

மனித வரக்கத்தின் சரித்திரம் முழுவதுமே உழைக்கும், மக்களின் குருதியினாலேயே எழுதப்பட்டுள்ளது. உலகத்தின் தோற்றம் என்றைக்கு நிகழ்ந்ததோ- அன்றே உயிரினங்கள் தோற்றம் பெற்றுவிடவில்லை. சில, ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் தோற்றம் பெற்ற மானுடம் உயிர் வாழும் நோக்கோடு உணவுதேடி அலையும் நிலையில்- தன்னைச் சுற்றி பரந்து கிடக்கும் பூமியை; உலகத்தைப் அறிவியல் மனதை வளர்த்துக்கொண்டது. அதன், வாயிலாக" எல்லா உயிரினங்களுக்கும், பொதுமையான பூமியை மானிடவர்க்கத்தில் ஆளுமையுடைய சிலரால் தனியுடைமையாக அபகரிக்கப்பட்டு,

அதற்கு, தாம் உரித்தானவர்களாக முடிசூட்டிக்கொண்டார்கள்.

இந்த நிலை தாம், மனிதவர்க்கத்தின் சரித்திரம் தோற்றம் பெறுகிறது.

என்றைக்கு பொதுவுடைமையான பூமி தனியுடமையாக்கப்பட்டு எல்லைகள் போடப்பட்டதோ- அன்றைக்கே இவ் அநீதிக்கெதிராக, நீதி நிலைபெற- பூமியில் மக்களனைவரும் உழைத்து வாழ " தனியுடமை முறைமைக்கு எதிராக, மக்கள் சுதந்திர உணர்வால் போராட ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட போர்களில் ஒன்றுதாம் பண்டைய இந்தியாவில் நிகழ்ந்த குருசேத்திர போராகும். உழைக்கும் மக்களின் போராட்டமான இவ்வகைப் போர்கள் பூமி, முழுவதிலும் நிகழ்ந்திருக்கிறது. இவ்விதமாக வரலாறு கண்ட யுத்தங்களை ஏதோ ஒரு பெயரிட்டு "அன்றைய மன்னர்கள் அதை , தமது அறப்போராக அல்லது இறைவனால் நடாத்தப்பட்ட நீதிப்போராட்டமாகச் சரித்திரமெழுதிவிட்டார்கள். உதாரணம்: " துவாரகையை" தலைநகராகக்கண்டு அதன், மக்களின் எழுச்சிப்போரை குருசேத்திர போராகக்காட்டும் சரித்திரம்.

தனியுடமையை நிலைநிறுத்திக் கொள்ளமுயன்ற அன்றைய பாரத மன்னர்கள் , மதத்தின் பெயரால் "இறைவனே முன்னின்று நடாத்தி முடித்த போராக - மக்களின் உரிமைப் போரை " மகாபாரதம்" என்று இயற்றி இந்துமதத்தின் பெரும்காப்பியமாகக் காட்டிவிட்டார்கள். பாண்டவர்கள் என்ற ஐந்து இராஜகுமாரரும்தாம் நீதிக்காக போராடுகிறார்கள். மீதமுள்ள பக்கத்தில் " அனைத்து மக்களும் ராஷகர்களென்றும் , கௌரவர்களென்றும், பெயர்சூட்டப்பட்டு -இவர்களை அநீதியானவர்களாகவும் , கொடுமையானவர்களாகவும் காட்டப்படடுள்ளார்கள். அனைத்து மக்களின் நீதிப்போருக்கு களங்கம் கற்பிக்கும் வகையிலே "திரியோதனன்" தலைமையில் ஒரு அரசு நிறுவி (கற்பனையில்) அவன் பின்னால் நின்று அனைத்து மக்களும் போராடுவதாகவும், அவர்கள் யாவருமே பூமியை (நாட்டை) அபகரித்த ராஷகர்களென்று வரலாறு எழுதிவிட்டார்கள்.

இதன்படியே தனியுடமை அமைப்புக்கு சிதைவு , ஏற்படாதவண்ணம் மக்களை அடக்கியாளப் பிறந்த கருத்தியல்தாம் பகவத்கீதை என்பதை உய்துணர்க!

www.tamilarangam.net

பாரதப் போரில் அரிச்சுனனுக்கு கிருஷ்ணன் (இறைவனாம்) அறிவுரை கூறிய கருத்துகளாம் கீதை! இது, மானிடனுக்கு கூறப்பட்டதல்ல; தேவர்களாகிய பாண்டவர் சேனைத் தலைவர்களில் ஒருவனாகிய அருச்சணனுக்கு இறைவனால் கூறப்பட்டது. எனவே, இதை இப்போதைய மானிடர்கள் பின்பற்றி நடந்தால் அது, மானிடர்களுக்கு "மோஷத்தில்" இன்பங்கிடைக்கும் என்பது இந்துமதபோதகர்களின் கூற்று. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால்; கீதை கூறும் ஒரு விடயமே தனியுடமை அமைப்பைக்காக்கப் போதுமானது என்பதாகும். அதன் சாரம் இதுதான்: " உன் கடமை தொழில் செய்வது; அதன் இலாப நஷ்டங்கள் உன்னைச் சேர்ந்தவையல்ல. என்ன வரப்போகிறதென்று நினைக்காதே; அதற்காகத் தொழில் செய்யாமலும் இராதே.(கீதை இரண்டாம் அத்தியாயம். ஸாங்கிய யோகம் பக்கம்:33. வாசகம்:47) பகவத்கீதையை படித்தறிந்தவர்களுக்கு ஒரு உண்மை நன்றாகப் புலனாகும். கீதையில் , எங்கு நோக்கிலும் அது தொழில் செய்யத்தூண்டுகிறது. ஆனால் பலனை எதிர்பாராதே என்று கட்டளையிடுகிறது. அதுபோல் அறப்போர் மன்னனுக்குடையதாகவும் கற்பிக்கிறது. மன்னன், கொடுங்கோல் அரசு புரியும்வேளை மக்கள் போர் செய்ய வாய்ப்பில்லை. ஆனால், மன்னர்களுக்கு-மன்னர்கள் தொடுக்கும் போரே அறப்போராம். அதற்காக மக்கள் உயிர் கொடுப்பது, மக்களின் கர்மயோகமாம். போர்களத்தில் பலியாகும் மக்களுக்கு மறுஉலகத்தில், சொர்க்கம் கிடைக்குமாம். கீதையின் சாரம் இதுதான். இது, உங்களுடைய (வாசகர்களின்) சிந்தனைக்கே உள்ள ஆற்றலின்படி பகுத்தாய்து கொள்ளவிட்டுவிடுகிறேன்.

கீதையின், தனியுடமை வர்க்கநலனின் அக்கறையை எடுத்துக்காட்டவே முயன்றிருக்கிறேன்.

இனிக் கட்டுரையின் நோக்கத்திற்கு வருவோம்:

மனிதவர்க்கத்தில் நடத்தப்படும் கொடுமைகளை யார் நடத்திவைக்கிறார்கள்? உழைக்கும் மக்களின் உழைப்பைச் சுரண்டி, எல்லாமானுடமும் உயிர்வாழவேண்டிய பூமியைத் தனியுடமையாக்கி "ஒருசிலர் வாழ வகை செய்யும், இன்றைய முதலாளித்துவ முறைமையே கொடுமைகளைச் செய்துவருகிறது! அநீதி புரியும் இன்றைய அரசியல் முறைமையை எதிர்த்து தொழிலாளர்கள் போரிடுகிறார்கள், அதை முதலாளித்துவ அரசின் காவல் நாய்கள் அடக்கியொடுக்கிறார்கள். இது, இன்றைய நிலைமை. இந்த விடயம் இப்படி இருக்கட்டும்.

மதங்களின் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்துள்ள எமது பல்கலைப் பட்டதாரிகளே! படித்தறியாமல், மதபோதகர்கள் கூறுவதை நம்பும் பாட்டாளிகளே!! வாழ்க்கையில் விழுமிய விஷயமாக மதம் இருப்பதாகக் கூறும் என் இனிய மடாதிபதிகளே!!! உங்களோடு ஒரு நிமிஷம் பேசப்போகிறேன். பூமியெங்கும் நீதி செலுத்தப்பட்டுக் கொண்டிருக்க, நீங்கள் சமாதானத்திலும் , சந்தோஷத்திலும் வாழ விரும்புகிறீர்களா? ஆம்! என்று நிச்சியமாக எல்லோரும் பதிலளிப்பீர்கள். ஏனெனில், மானுடவர்க்கத்தின் சரித்திரம் முழுவதுமே நீதிக்காக, நிலைநிறுத்தப்பட்ட போராட்டம் நிகழ்ந்துவிடுகிறது. இறைவன் ஒருவன் இருக்கிறான் என்றும்; மதங்கள்உண்மையென்றும் நம்பும் மானிடவர்க்கத்தின் கனிஷமான மக்களுக்கு இந்தப்போராட்டம் பல முறைகளில் தெரிகிறது. இந்நிலையில் , மக்களின் துயரத்துக்கும், வறுமைக்கும், ஏற்றதாழ்வுக்கும்

www.tamilarangam.net

இன்றைய முதலாளித்துவ பொருளாதார அமைப்பே காரணம் என்று சகல மத நம்பிக்கையுடையவர்களும் அறிவார்கள். மதபோதகர்கள், பொதுவாக "அரசியல்தாம்" காரணம் என்று கூறுகிறார்கள். ஏனெனில், மதபோதகர்கள் முதலாளித்துவ பொருளாதார அமைப்பைக் கட்டிக்காக்கும் காவலர்கள் என்பதால் உண்மையை, பொதுவான ஒரு சொல்மூலம் தெளிவாக விடாமல் தடுக்கிறார்கள்.

"இந்துமதத்தில், அநீதிக்கெதிராக இறைவனே போராடி நீதியை காப்பாற்றுகிறானாம். அவ்விதப்போர்தாம் பாரதப்போர் என்று மத நம்பிக்கையுடையவர்கள் கூறுகிறார்கள்"

இவை இப்படியிருக்க-

கிறிஸ்துவ மதம் மக்களின் துயரநிலைக்கு தீர்வுகாண என்ன சொல்கிறது என்பதையும் பார்ப்போம். "குருசேத்திரத்திலிருந்து அர்மகெதோனுக்கு- நீங்கள் தப்பிப்பிழைத்திருப்பதற்கும்" என்ற கிறிஸ்துவமத நூலின் ஆசிரியர், கெ.எம்.சென் இப்படி எழுதுகிறார்: வருந்தத்தக்கதாய் இன்று, அநீதியும், துன்பமும் முழுமனிதகுலத்தையும், சரித்திரத்தில் முன்னொருபோதும் இராதவண்ணமாய் மிகவிரிவாகவும் , மிகக் கடுமையான முறையிலும் தொல்லைப்படுத்துகின்றன. ஆகவே, சரித்திரத்தின் போர்களில் எதுவுமே கடவுளுடைய ஆட்சிக்கும், இவ்வளவு அதிக பொல்லாப்பில் விளைவடைந்திருக்கிற மனித ஆட்சிமுறைகளுக்கும் இடையிலுள்ள இந்த விவாதத்தை நிலையாகத் தீர்த்து வைத்திருக்கவில்லையென்று ஒப்புக்கொள்ளவேண்டும். நிலையான சமாதானமும் பாதுகாப்பும் மனிதவர்க்கத்திற்குப் பிடிகொடாமல் தொடர்ந்து நழுவிச்சென்றுகொண்டே இருக்கின்றன. ஆகவே, இன்று உண்மையான நீதிக்குரிய காரணம் இன்னும் திருப்திப்படுத்தப்படவேண்டியதாய் இருக்கிறது. ஆனால் எப்படி?

"குருசேத்திரத்தில் செய்ய முயன்றதாக நம்பப்படுகிற அதேமுறையிலாகும். இது தீர்வான ஒரு போரைத் தேவைப்படுத்துகிறது. ஆனால், உண்மையாக நிலையான விளைவுகளை உண்டு பண்ணும் , மிகப்பெரிய அளவான போரைத் தேவைப்படுத்துகிறது. என்றபோதிலும், அதில் நீதியுள்ளவர்கள்(தொழிலாளவர்க்கம்?) தப்பிப்பிழைத்து மனிதகுலம் அழியாதபடி பாதுகாத்து வைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் ஒரு போராகவும் இருக்கவேண்டும். என்று எழுதுகிறார். இங்கு தாம் நாம் மார்க்சிசத்தின் கூற்று எவ்வளவு யதார்த்தமானது என்பதைப் புரிந்து கொள்கிறோம்... மானுடவர்க்கத்தினது துயரத்துக் காரணம், "தனியுடமை" வர்க்கத்தினது சரண்டலேயாகும்! இந்தச் சரண்டலிலிருந்து விடுபடவும், குறையாடப்பட்ட செல்வத்தை நியாயமாகப் பங்கீடு செய்துகொள்ளவும் தாம் ஒரு போர் தேவைப்படுகிறது. இவ்விதப் போரைச் செய்வது யார்?

கடவுளா?

மனிதனா?

இந்தக் கேள்விக்கு அனைத்து மதங்களும் இறைவனே செய்துகொள்வான்என்று சாக்குப்போக்குச் சொல்லிவருகின்றன.

(அடுத்த இதழில் முடியும்)

இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள்...

Srilanka Verein in der Bundesrepublik Deutschland und Westberlin.
c/o.Dritte Welt Cafe e.V.
8000 Munchen 70
Tel:089-772696



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் ஒரு இலக்கியசஞ்சிகை அறிமுகம்.

13.01.90 அன்று சஞ்சிகை வெளியீட்டுவிழா ஒன்றிற்கு Sindelfingen(Stuttgart) சென்றிருந்தேன். மாதம் ஒருமுறை "தளிர்" என்ற பெயருடன் இலக்கியம் மற்றும் புதிய அணுகுமுறைக் கருத்துக்களைத் தாங்கி வெளிவரும் என்று ஆசிரியர்குழு என் காதில் போட்டனர்.

மணி 7.30 என்றிருந்த விழா காலதாமதத்துடன் மண்டபம் நிறைந்த ஜெர்மானிய தமிழ் இலக்கிய ஆர்வலர்களுடன் ஆரம்பமாகியது. வழமைபோலவே மௌன அஞ்சலி, வரவேற்புரை, சிறப்புரை, வாழ்த்துக்கள்-பின்னர் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்ச்சியில்...

வெளிநாட்டவர் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர் டாக்டர். திரு.தெய்வேந்திரன் அவர்கள் முதல் இதழை வெளியிட சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஜெர்மன் விரிவுரையாளர் திரு.மன்பிரட்குயின்லைன் அவர்கள் முதல் பிரதியை பெற்று வாழ்த்தினார்.

அவர் உரையாற்றுகையில் தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டிய விடயத்தை அவசியமாக வலியுறுத்தினார்.

இடையே பொங்கல் விருந்து அனைவராலும் சுவைக்கப்பட்டது. தொடர்ந்த நிகழ்ச்சிகளில்...

தமிழ் சிறுவர், சிறுமிகள் தாம் கற்றுக்கொண்ட பாடல், கதை, இசை என்பவற்றை ஜெர்மன், தமிழ் மொழிகளில் குழுக்களாகவும் தனியாகவும் பேசி, நடித்து, இசைத்து எம்மை ஆச்சரியப்படுத்தினர்.

விழா நிகழ்ச்சிகளை உடனுக்குடன் மொழிபெயர்த்தவர்கள் திரு.யோகநாதன் புத்ரா, மற்றும் புஸ்பராஜா மனோராஜ் குறிப்பிடத்தக்கவர்கள்.

நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தவர்களில் திரு.அப்புத்துரை குமரன், பிரகாலநிதி "தளிர்" ஆசிரியர் கௌரீஸ்வரன் ஆகியோர். நிறைவு நிகழ்ச்சியில் "தளிர்" துணை ஆசிரியர் திரு.அப்புத்துரை குமரன் (பி.ஏ) அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழா இனிது நிறைவுபெற்றது!

காங்கேசன் கோவிந்தகுமார்.

---

## இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கை

இலங்கையரசினாலும், அதைச் சார்ந்த குழுக்களினாலும், நாட்டில் பரவலாக நடாத்தப்படும் ஆள்கடத்தல்,கொலைகள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக "இலங்கையர் குழு" 05.02.1990 திங்கட்கிழமையன்று "பொண்"ணிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் எதிர்ப்பு நடவடிக்கையொன்றை நடாத்தவுள்ளது.

இலங்கையர் குழுவின் கூட்டம் 04.02.1990 ஞாயிற்றுக்கிழமை "பொண்" நகரில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திலும், ஒரு நாள் நடைபெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள விரும்புகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். (20ம் பக்கம் பார்க்க)

## தேனீ

இரு மாதங்களுக்கொருமுறை வெளிவருகின்றது.

ஆசிரியர்குழு: தேனீக்கள்

தனிஇதழ் : 3டீ.எம்

வருடசந்தா 20டீ.எம்

ஆக்கங்கள், சந்தா முதலிய அனைத்துத் தொடர்புகளுக்கும்.

THENEE
Im Wachholder 11,
7151, ALLMERSBACH im TAL.
Buch:THENEE
Sparkonto Nr: 49435418
Bankleitzahl: 60261818
RAIFFEISEN BANK WEISSACHER TAL EG
7151, ALLMERSBACH im TAL

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதியின் பாடல்

ஆற்றிலே நீரலைகள்
அழகு காட்டும் வெண்ணிலவு
நெஞ்சிலே நினைவலைகள்
நினைவில் உந்தன் முகமம்மா.

உடைந்து போன ஒரு படகைப் போல நான்
எங்கோ தொலைவில் அலைகின்றேன்
தொலைந்து போன என் ஆன்மாவை உன்
நினைவில் தானே அடைகின்றேன்.
இழப்பின் நடுவிலும் உயிர்க்கும் உளத்துடிப்பை
எனக்குள் நிறைத்து வைத்த அம்மா

என்ன எதற்கு எனும் சின்ன வயதுகளில்
மண்ணை அறிமுகம் செய்தாயே.
சொன்ன கதைகள் அன்று சுவைத்த பாடல்களில்
என்னுள் கவிதைகள் வளர்த்தாயே
கண்ணின் நீர் துடைத்து காதல் மொழி உரைத்து
காலம் வெல்லும் என்று சொல்வாயே.

அன்னை மண்ணின் செம் புழுதி தோய நான்
ஆடித்திரிந்த அந்த நாட்கள்.
பின்னர் தோழருடன் மண்ணை மாற்றவென்று
வண்ணக்கனவு கண்ட நாட்கள்.
விண்ணில் சிறகசைக்கும் எண்ணம் நிறைந்த என்னை
மண்ணில் நிறுத்தி வைத்த அம்மா.

வ.ஐ.ச.ஜெயபாலன்

(நன்றி: வீரகேசரி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்